119885

# அழகு சுந்தரி ஒப்பாரி



இயற்றியவர்:
**வி. எஸ். கோவிந்தசாமி தேவர்**

விலை சதம் 50

அச்சுப்பதிப்பு: மவுண்ட் அச்சகம், அட்டன். 822/70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வி. எஸ். கோவிந்தசாமி தேவர்
இயற்றிய
# அழகுசுந்தரி ஒப்பாரி

## தகப்பனுருக்கு மகள் புலம்பல்

ஐயாவே ஐயாவே அன்புள்ள ஐயாவே
ஐயாவைக் காணுமல் அலேகிருேம் பூமியிலே

மலேயாம் பருவதமாம் என்னைப்பெற்ற அப்பா
நான் பிறந்த சீமையிலே
மயிலாடும் பாறைகளாம் அழகு
மயிலாடும் பாறையிலே மான்கள் விளையாடும்
மருவி உறவாடும் அந்த மானுக்கே வச்சவெடி
என்னைப்பெற்ற அப்பா உங்க
மார்புருவிப் பாஞ்சதய்யோ.

அஞ்சு மலேயுமுண்டு என்னைப்பெற்ற அப்பா
நான் பிறந்த சீமையிலே
அடிவாரத்தாவுமுண்டு மலே
அடிவாரத் தொங்கலிலே ஆனை அசஞ்சுவரும்
அடலேறு தாவிவரும் அந்த ஆனைக்கே வச்சவெடி
என்னைப்பெற்ற அப்பா உங்க
அணிமுடிமேற் பட்டுதய்யோ.

பத்தடி வேங்கை ஒன்று என்னைப்பெற்ற அப்பா
பதிவிருந்து பாயுதென்று அந்த
பாரமலேவேடன் பளிங்குமலே வாழ்குறவன்
பாணம்விடுத்தானே பாசவலே போட்டானே.
என்னைப்பெற்ற அப்பா பாயும் புலிசாய
நீங்க பெற்றமக்க நாங்க படுந்துயரம் மெத்தவல்லோ.

எட்டடி வேங்கை ஒன்று என்னைப்பெற்ற அப்பா
இருப்பிருந்து பாயுதென்று அந்த
வெட்டுங்குலமறவன் வீரமலே வாழ்வீமன்
வில்லே வளேச்சானே வீச்சுவலே போட்டானே
என்னைப்பெற்ற அப்பா வேங்கைப் புலிசாய
நீங்க பெற்றமக்க நாங்கபடும்
வேதனையும் ரொம்பவல்லோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தேருமாடுகட்டி என்னைப்பெற்ற அப்பா
நான் பிறந்த சீமையிலே
பத்தடுக்கு மாடிகட்டி நம்ம
பண்ணை நிறஞ்சு நிற்கும் பாற்பசுக்கள் மிச்சமுண்டு
ஒரு பால்பசுவை நான் பிடிக்க
பத்துத்தலையாரி நீங்களில்லாத வாசலிலே
எனக்குப் பதினெட்டுச் சிப்பாயி

எட்டேருமாடுகட்டி என்னைப்பெற்ற அப்பா
நான் பிறந்த சீமையிலே
ஏழடுக்கு மாடிகட்டி பட்டி
எங்கும் நிறஞ்சு நிற்கும் இளம்பசுக்கள் ஏராளம்
ஒரு இளம்பசுவை நான் பிடிக்க
எட்டுத்தலையாரி நீங்களில்லாத வாசலிலே
எனக்கு ஏழெட்டுச் சிப்பாயி

தோட்டப்படிக்கிணறு என்னைப் பெற்ற அப்பா
நான் பிறந்த பூமியிலே
தொலையாத நெய்க்கிணறு நான்பாவி
தோட்டப் படியிறங்கி தொட்டு முகங்கழுவ
சொகுசா வளர்ந்தமகள் சோதிமுகத் தங்கமகள்
என்னைப்பெற்ற அப்பா இன்றைக்கு தூரத்தாளானே னே

வாட்டப்படிக்கிணறு என்னைப்பெற்ற அப்பா
நான் பிறந்த பூமியிலே
வற்றாத மோர்க்கிணறு நான்பாவி
வாட்டபடியிறங்கி மதிமுகத்தையான் கழுவ
என்னைப்பெற்ற அப்பா இன்றைக்கு
வழிப்போக்காளானே னே

தேங்காய் குலை பழுக்கும் என்னைப்பெற்ற அப்பா
நான்பிறந்த வாசலிலே
திரளாக்குவிஞ்சிருக்கும் நீங்கபெற்ற
செல்லமகள் உள்நுழைஞ்சு
ஒரு தேங்கனியை நானெடுக்க
என்னைப்பெற்ற அப்பா என்னோடே
திரேகம் நடுங்குதிப்போ.

மாங்காக்குலை பழுக்கும் என்னைப்பெற்ற அப்பா
நான்பிறந்த வாசலிலே
மலையாக் குவிஞ்சிருக்கும் நீங்கபெற்ற
மாமயிலாள் உள்நுழைஞ்சு
ஒரு மாங்கனியை நானெடுக்க
என்னைப்பெற்ற அப்பா என்னோடே
மனசோ துடிக்குதப்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழையிலைகொண்டு என்னைப்பெற்ற அப்பா;
நீங்கபெற்ற தங்கமகள்
நான்பிறந்த வாசலுக்கு வழிநெடுக வந்தாலும்
வாழையிலைக்கட்டிரக்கி என்னோடு
வயிறுபசியாறுதற்கோ;
நீங்களில்லாத வாசலிலே என்னைப்பெற்ற அப்பா
என்னை வழிமறிக்க நாளாச்சே.

தாழையிலைகொண்ட என்னைப்பெற்ற அப்பா
நீங்கபெற்ற செல்வமகள்
நான்பிறந்த வாசலுக்கு தடங்கூடி வந்தாலும்
தாழையிலைக்கட்டிரக்கி என்னோட
தாகம் தணிப்பதற்கோ
நீங்களில்லாத வாசலிலே என்னைப்பெற்ற அப்பா
எனக்குத்தடைவிதிக்க நாளாச்சே.

தடையை உடைச்சிடுவேன் என்னைப்பெற்ற அப்பா
நீங்கள்பெற்ற தங்கமகள்
நான்பிறந்த வாசலுக்குள்
தைரியமாய் உள்நுழைவேன் நான்பாவி
தடையை உடைச்சாலோ! என்னைப்பெற்ற அப்பா
என் கூடப்பிறந்த தம்பிமனம் புண்ணாகும்.

உத்தரவை மீறிடுவேன் என்னைப்பெற்ற அப்பா
நீங்கபெற்ற செல்வமகள்
நான்பிறந்த வாசலுக்கு
ஓர்நொடியில் உள்நுழைவேன் நான்பாவி
அத்துமீறி உள்நுழைஞ்சா என்னைப்பெற்ற அப்பா
என்கூடப்பிறந்த அண்ணன் மனம் கல்லாகும்

கொக்கு மனஞ்சலிச்சா என்னைப்பெற்ற அப்பா
குளக்கரையில் குந்திருக்கும்
காக்கா மனஞ்சலிச்சா கடற்கரையில் ஊசாடும்
வக்கா மனஞ்சலிச்சா வானுலகில் வட்டமிடும்
நீங்கபெற்ற மக்கள் மனஞ்சலிச்சா
என்னைப்பெற்ற அப்பா எங்களை மதிப்பாரெவருமில்லை

பருந்து மனஞ்சலிச்சா என்னைப்பெற்ற அப்பா
பட்டணத்தைக் கண்கவரும்
நாரை மனஞ்சலிச்சா நாலுமலை தாண்டிவரும்
குருவி மனஞ்சலிச்சா கூட்டிலிருந்தோலமிடும்
நீங்கப்பெற்ற குழந்தை மனஞ்சலிச்சா
என்னைப்பெற்ற அப்பா எங்களை
கொண்டணைப்பாராருமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுமூங்கில் கொண்டுவந்து என்னைப்பெற்ற அப்பா
உங்க அம்சத்திற் குகந்ததொரு
அஞ்சு முகத்தேருக்கட்டி—அந்த
அஞ்சு முகத்தேருக்குள்ளே என்னைப்பெற்ற
அர்ச்சுனரை உள்ளிருத்தி
அரஹரா வென்று சொல்லி ஆள்த்தூக்கிப் போகயிலே
அசையுது பல்லாக்கு அதிருதேடம்மாரம்
உங்களோட அடுத்து வருவனென்று என்னைப்பெற்ற அப்பா
நீங்கபோகும் அழகுத்தேர் எட்டாதே.

குருத்து மூங்கில் கொண்டுவந்து என்னைப்பெற்ற அப்பா
உங்க குணத்திற்குகந்ததொரு
கோலமுகத் தேருகட்டி—அந்த
கோலமுகத் தேருக்குள்ளே என்னைப்பெற்ற
கோவிலரை உள்ளிருத்தி இன்றைக்கு
கோவிந்தா வென்று சொல்லி
கூப்பிட்டுத் தூக்கயிலே
குலுங்குது பூந்தேரு கொட்டுது மல்லிகைப்பூ
உங்க கூடவருவனென்று என்னைப்பெற்ற அப்பா
நீங்கபோகும் குலுங்குத்தேர் எட்டாதே.

## கடல் கடந்த மக்கள் ஒப்பாரி

அய்யாவே அய்யாவே அன்புள்ள அய்யாவே எங்க
அய்யாவைக் காணாமல் நாங்க அலைகிறோம் பூமியிலே

தங்கச்சரமெத்தையிலே என்னைப்பெற்ற அப்பா
தாழம்பூக் கட்டிலிலே
தலையோவலிக்குதென்று உங்க தங்கவுடல் நோவுதென்று
நீங்க பெற்ற மகளுக்கொரு
தந்திவந்துசேர்ந்துதய்யா—நான்பாவி
தந்தியைக் கண்டவுடன் உங்க தலைவலிக்கு ஏற்றநல்ல
தணிகைமலைத் திர்த்தம் கொண்டு நீங்கபெற்ற
தங்காவழிநடந்தா தலையும் வலிக்காதே
என்னைப்பெற்ற அப்பா உங்களோட
தங்கஉடல் நோகாதே.

பொன்னுச் சரமெத்தைதயிலே என்னைப்பெற்ற அப்பா
பூப்போட்டகட்டிலிலே
புடரிவலிக்குதென்று உங்க பொன்னுடம்பு நோவுதென்று
நீங்கபெற்ற மக்களுக்கு
போட்டுவிட்ட காயிதங்கோ நான்பாவி
காயிதத்தைக்கண்டவுடன் புடரிவலிக்கேற்றநல்ல
பொதிகைமலைத்திர்த்தம்கொண்டு நீங்கபெற்ற
பொன்னுவழிநடந்தா புடரிவலிக்காதே;
என்னைப்பெற்ற அப்பா உங்களோட
பொன்னுடம்போ நோகாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்ருலதீர்த்தம் என்னைப்பெற்ற அப்பா
குமரிமுனை மாமாங்கம்;
குற்ருல சன்னிதியில் கும்பம் நிழலாடும்
குயிலிருந்து பண்பாடும் அந்த
குற்ருல நாதரிடம் என்னைப்பெற்ற அப்பா
என்னுடை குறைபாட்டை சொல்லிநின்று
நான்பாவி குற்ருல தீர்த்தங்கொண்டு
என்னைப்பெற்ற அப்பா நீங்கபெற்ற
குயிலுவரோத்தாமதந்தான்.

காசிநதித்தீர்த்தம் என்னைப்பெற்ற அப்பா
கதிர்காம மாமாங்கம்;
கதிர்காமச்சன்னிதியில் கானமயிலாடும்
காவடிகள் நின்ருடும் அந்தக்
கதிர்காம வேலரிடம் என்னைப்பெற்ற அப்பா
என்னுடை கன குறையைச் சொல்லிநின்று
நான்பாவி கதிர்காமத் தீர்த்தங்கொண்டு
என்னைப்பெற்ற அப்பா நீங்கபெற்ற
கன்னிவரோத்தாமதந்தான்.

கப்பல் அலங்காரம் என்னைப்பெற்ற அப்பா
கம்பிகயிர் சிங்காரம்
கப்பல்வரப்போவுதென்று நீங்கள்பெற்ற மக்கள்
கரையேறிக்காத்திருந்தோம் அந்த
கப்பல் கவுந்ததய்யோ என்னைப்பெற்ற சீமானே
நீங்கபெற்ற மக்களெல்லாம்
கடற்கரையில் நின்றழுதோம்.

தோணி அலங்காரம் என்னைப்பெற்ற அப்பா
தோணிகயிர் சிங்காரம்
தோணிவரப்போவுதென்று நீங்கபெற்ற மக்கள்
துறையேறிப்பார்த்திருந்தோம் அந்த
தோணிகவுந்ததய்யோ என்னைப்பெற்ற பூமானே
நீங்கபெற்ற மக்களெல்லாம்
துறைமுகத்தில் நின்றழுதோம்.

பரந்த கடலாலுல் என்னைப்பெற்ற அப்பா
நீங்கபெற்ற தங்கமகள்
பாஞ்சடிச்சோ வந்திடுவேன்
நிறஞ்சகடல் மத்தியிலே நீங்கபெற்ற செல்வமகள்
நீச்சடிச்சோ வந்திடுவேன் நான்பாவி
ஆகாயக்கப்பலிலே என்னைக்கொண்ட
அருச்சுனனும் நானும் அலகழிஞ்சுவந்தாலும்
அங்கம் பார்க்கக் கிட்டலையே
நான்பாவி கொண்டுவந்த அரந்தாங்கிப்பட்டு
உங்க அங்கத்துக்கும் போத்தலையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரக்கடலானுல் என்னைப்பெற்ற அப்பா
நீங்கபெற்ற செல்லமகள்
துடிதுடிச்சோ வந்திடுவேன்
கோரக்கடல் மத்தியிலே நீங்கபெற்ற தங்கமகள்
குதிச்சடிச்சோ வந்திடுவேன் நான்பாவி
வானுலகக்கப்பலிலே என்னைக்கொண்ட
மன்னவரும் நானும் வந்து உடன் சேர்ந்தாலும்
மதிமுகத்தைப் பார்க்கலேயே
நான்பாவி கொண்டுவந்த மாமதுரைப்பட்டு
உங்க மதிமுகத்தில் போத்தலேயே.

## தாயாருக்குப் புலம்பல்

அம்மாவே அம்மாவே என்னைப்பெற்ற அம்மாவே
எங்க அம்மாவைக்காணுமல் அழுகிறோம் பூமியிலே

சீராட்டித்தாலாட்டி என்னைப்பெற்ற அம்மா
தெள்ளுத்தமிழ் பாலூட்டி நாங்க
சீரும் சிறப்போடு செயலோடு வாழ்ந்திருந்தோம்
என்னைப்பெற்ற சீமாட்டி போய்மடிய
என்னைப்பெற்ற தாயே நீங்கபெற்ற செல்லமக்கள்
இன்றைக்கு சிந்தைநொந்துவாடுகிறோம்

பாலூட்டி நெய்யூட்டி என்னைப்பெற்ற தாயே
படுக்கையிலே சோறூட்டி நாங்க
பாலுண்டு நெய்யுண்டு பவுசோடு வாழ்ந்திருந்தோம்
என்னைப்பெற்ற பாக்யவதி போய்மடிய
என்னைப்பெற்ற தாயே நீங்கபெற்ற தங்கமக்கள்
இன்றைக்குப் பதறிமனம் வாடுகிறோம்.

கல்லாலின் கீழிருந்து என்னைப்பெற்ற அம்மா
நான்பாவி சண்டாளி
கதறியழுதாலும் அந்தக்
கல்லால் கனியருந்த கடல்தாண்டி வந்திருக்கும்
கனகோடிப்பட்சிகளும் நான்பாவி
கதறும் குரல்கேட்டு
கல்லால் கனியருந்தக் கலக்கமிகவுண்டாகி
கண்டு சகிக்காமல் கனியருந்தமாட்டாமல்
என்னைப்பெற்ற அம்மா அதுகள்
கடல்தாண்டிச் சென்றதம்மா.

வெள்ளாலின் கீழிருந்து என்னைப்பெற்ற அம்மா
நான்பாவி சண்டாளி
விம்மியழுதாலும் அந்த
வெள்ளால் கனியருந்த விரைந்தோடி வந்திருக்கும்
வெகுகோடிப் பட்சிகளும் நான்பாவி
விம்மும் குரல்கேட்டு
வெள்ளால் கனியருந்த வேறுவழியில்லாமல்
வேதனைசகிக்காமல் வெகுதுயரம் உண்டாகி
என்னைப்பெற்ற அம்மா அதுகள்
விண்தாண்டிப்போனதம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லியம்மன் கோவிலிலே என்னைப்பெற்ற அம்மா
நான்பிறந்த சீமையிலே
சித்திரத்தேர் ஓடலிலே உங்க
செல்வமருமகனும் சீராடும் நல்மகளும் அந்த
செல்லியம்மா கண்களிக்க திருவிளக்கு ஏற்றயிலே
தேரின் குடைமுறிஞ்சி என்னைப்பெற்ற தாயே
நீங்கபெற்ற செல்லிமேல் சாஞ்சுதம்மா.

எல்லையம்மன் கோவிலிலே என்னைப்பெற்ற அம்மா
நான்பிறந்த சீமையிலே
இரத்தினத்தேர் ஓடையிலே உங்க
இலங்குமருமகனும் எதிராடும் சீர்மகளும் அந்த
எல்லையம்மா கண்களிக்க இருந்துதவம் செய்யயிலே
ரதத்தின் குடைதெரித்து என்னைப்பெற்ற தாயே
நீங்கபெற்ற நங்கைமேல் சாஞ்சதம்மா.

ரோஜாப்பூச் சோடனையாம் என்னைப்பெற்ற அம்மா
நான்பிறந்த வாசலிலே
சொல்லடங்கா பூந்தேரு
சோடிச்சு வச்சிருக்கு சொல்லுங்கோ வாய்திறந்து
உங்க சொச்சமிச்சம் பேச்சிருந்தா
நீங்கபெற்ற மகளுக்கோ; ஒரு
சோதனையும் ஆகாது

மகிழம்பூ பல்லாக்கு என்னைப்பெற்ற அம்மா
உங்க மனதுக்குகந்த நல்ல
மாதாளம் பூத்தேரு அந்த
மகிழம் பூத் தேரேறி என்னைப்பெற்ற தாயே
நீங்கபெற்ற மக்களையும் கையமர்த்தி
மறந்து வழிநடந்தா என்னைப்பெற்ற அம்மா
நீங்கபெற்றமக்கள் மனமென்னுகும்

# புருஷனுக்குப் புலம்பல்

மாமரத்து சோலையிலே ராஜாவே மந்திரியே
மகிழ்ந்தூஞ்சலாடையிலே கொத்து
மாங்காய் நிழலாடும் மாங்குயில்கள் பண்பாடும்
மாமரத்துச்சோலையிலே மகிழ்ந்துஞ்சலாடையிலே
மாங்காக்குலைசரிஞ்சு மாமரத்துக் கொப்பொடிஞ்சு
உங்க மகுடமுடி சாஞ்சதென்ன
நான்பாவி மயங்கி அழுகிறது என்சாமி என்துரையே
நீங்கபோகும் வானுலகுக் கெட்டலையோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமரத்துச்சோலையிலே நம்மயிருபேரும்
பொன்னூஞ்சலாடையிலே வண்ணப்
பூக்கள் நிழலாடும் பூங்குயில்கள் பண்பாடும்
பூமரத்துச்சோலையிலே பொன்னூஞ்சலாடையிலே
பொன்னுக் கயிரறுந்து பூமரத்துக்கொப்பொடிஞ்சு
உங்க பூமுடியுஞ்சாஞ்சதென்று நான்பாவி
புலம்பியழுகிறது என்சாமி என் துரையே
நீங்கபோகும் பொன்றூடு கேட்கலையோ.

வடக்கே வெகுதூரம் ராஜாவே மந்திரியே
வடகாசிப் பட்டணமாம் அந்த
வடகாசிப் பட்டுடுத்தி வைரநகைபூட்டி
மகிழ்ச்சியுடனிருந்தேன் என்னைத்தேடிய
மன்னவரும் போய்மடிய எனக்கு
வடகாசிப் பட்டின்றி வைரநகையுமின்றி
மன்னருக்கச்சை என்அழகுதுரை ராஜாவே
நான்பாவி வரிந்துடுக்கோ நாளாச்சே.

தெற்கே வெகுதூரம என்ராஜாவே மந்திரியே
தென்காசிப் பட்டணமாம் அந்த
தென்காசிப் பட்டுடுத்தி சிறந்த நகைபூட்டி
சிறப்போடு நானிருந்தேன் என்னைத்தேடிய
சீமானூர் போய்மடிய எனக்கு
தென்காசிப்பட்டின்றி சிறந்த நகையுமின்றி
திருப்பத்தூர் கச்சைகட்டி நான்பாவி சண்டாளி
சிறைஇருக்கோ நாளாச்சே.

வண்ணக்குருத்தோலை அழகுதுரை மதனே
வடக்கத்திப்பஞ்சாங்கம் வெகு
வடிவாய்க்கணித்தெழுதும் வள்ளுவனைக் கூட்டிவந்து
ராசிப்பொருத்தம் நட்சேத்திரப்பொருத்தம்
பேருப்பொருத்தம் பெரிய பொருத்தமென்று
பந்தல் அலங்கரித்து பண்போடுதாலிகட்டி
பார்த்தோர்க்கு மெய்யாச்சே பாவிமகன்சொன்ன
பஞ்சாங்கம் பொய்யாச்சே.

தென்னங்குருத்தோலை என் அழகுதுரைமதனே
தெக்கத்திப்பஞ்சாங்கம் வெகு
சிறப்பாய்கணித்தெழுதும் சோதிடனைக்கூட்டிவந்து
பட்சிப்பொருத்தம் பல பொருத்தமும் பார்த்து
சாதிப்பொருத்தம் சரியானதென்றுசொல்லி
சாஸ்திரவிதிப்படியே தடபுடலாத்தாலிகட்டி
சார்ந்தோர்க்கு மெய்யாச்சே பாவிமகன்சொன்ன
சாதகமும் பொய்யாச்சே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றங்கரையோரம் என் அழகுதுரைமதனே
அடுக்கரளிப்பூத்திருக்கும் நான்பாவி
ஆற்றில் தலைமுழுகி அடுக்கரளிப்பூவெடுத்து
அரன்பூஜை செய்யுமுன்னே என்னைக்கொண்ட
அர்ச்சுனரைக் கொள்ளையிட்டேன் இன்றைக்கு
அல்லிமனம்பதற அழகுதுரைப்பாண்டியனே
அடுக்கரளிவாடுதய்யோ.

குளத்தங்கரையோரம் என் அழகுதுரைமதனே
குடமல்லிப்பூத்திருக்கும் நான்பாவி
குளத்தில்தலைமுழுகி குடமல்லிப்பூவெடுத்து
குருபூஜைசெய்யுமுன்னே என்னைக்கொண்ட
கோவிலரை சூரையிட்டேன் இன்றைக்கு
குயிலாள் மனம்பதற அழகுதுரைப்பாண்டியனே
குடமல்லி வாடுதய்யோ.

தங்கநிலவடிக்கும் ராஜாவே மந்திரியே
தனிவெள்ளிசோதிமின்னும் இன்றைக்கு
தனித்துவழி நடக்கோ என்சாமியென்துரையே
என்னைத்தேடிய தர்மருக்கோ சம்மதமோ.

வெள்ளி நிலவடிக்கும் ராஜாவே மந்திரியே
விடிவெள்ளி ஜோதிமின்னும் என்னை
விட்டுவழி நடக்கோ அழகுதுரைமதனே
என்னைத்தேடிய வீமருக்கோ சம்மதமோ.

தேரைவழிமறிப்பேன் நான்பாவி சண்டாளி
நீங்கபோகும் திசைநோக்கி வந்திடுவேன்
நான்பாவி தேரைமறிச்சாலும்
ஆக்கினைச்சக்கரமே அழகுதுரைப்பாண்டியனே
நீங்கபோகும் சிவலோகம் தூரவல்லோ.

ரதத்தைவழிமறிப்பேன் நான்பாவி சண்டாளி
நீங்கபோகும் நல்மனைக்கோ வந்திடுவேன்
நான்பாவி ரதத்தை மறிச்சாலும்
சித்திரத்தாணே சிவன்கோவில் கோபுரமே
நீங்கபோகும் யமலோகம் தூரவல்லோ.

மாண்டு மடிஞ்சிடுவேன் நான்பாவி சண்டாளி
வாலேந்திப்பாஞ்சிடுவேன்
மாண்டுமடிஞ்சாலோ நீங்கபெற்றுப்பேரு
வைத்துபோன மக்கள் மனமென்னாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செத்துமடிஞ்சிடுவேன் நான்பாவி சண்டாளி
சிவனேயே போக்கிடுவேன் நான்
செத்துமடிஞ்சாலோ நீங்கபெற்று
பேருவைத்துப்போன சிசுக்கள்குறையென்னகும்.

பத்துப்பவுன் பொன்சரடு என் ராஜாவே மந்திரியே
நீங்கபார்த்துப் போட்டதொரு
பதக்கம்வைத்த முத்துநகை உங்க
பங்காளிமார்களெல்லாம் பார்த்துக்கழட்டயிலே
பருவமதயானே பாஞ்சுவரும் கொம்பானே
நான்பாவி சண்டாளி பதறித்துடிக்கிறேனே.

அஞ்சுபவுன்பொன்தாலி அழகுதுரைமதனே
நீங்க பார்த்துப்போட்ட நல்ல
அரும்பிழைத்த தங்கநகை உங்களோட
அடுத்துப் பிறந்தவங்கோ அதட்டிக்கழட்டயிலே
உருவமதயானே ஓடிவரும் கொம்பானே
என்னோட அங்கம் துடிக்குதய்யோ.

போனயிடந்தனிலே ராஜாவே மந்திரியே
புகழோடு வாழ்ந்திடுங்கோ
சென்றயிடந்தனிலே சீரோடு வாழ்ந்திடுங்கோ
சிவனே வழிபடுங்கோ என்சாமி என்துரையே
நீங்க போகும் திசைநோக்கி கும்பிடுறோம்.

## மகனுக்குப் புலம்பல்

பொன்னன கண்மணியே புத்திசிகாமணியே
கண்ணன பாலகனே உன்னைக்காண்பதினியெக்காலம்

சங்கரனர் கோயிலிலே நான்பெற்றயென்மகனே
நம்ம சீமையிலே தங்கரதம் ஓடயிலே
தவசிருந்து பெற்றமகன்
தந்தை மனம்சிதற தாயோ மனம் பதற
தனியே பிரிந்தாயே தனிநாடு கண்டாயோ
அட நான்பெற்ற பாலகனே எங்களை
தவிக்கவிட்டுச் சென்றயே.

நெல்லையப்பர் கோவிலிலே நான்பெற்ற பாலகனே
நம்ப சீமையிலே வெள்ளிரதம் ஓடயிலே
வரத்தால் உதித்தமகன்
மாதா நினைந்தழுக மாமிமக்கள் நொந்துருக
வழிதப்பிச் சென்றயோ வளநாடுகண்டாயோ
அட நான்பெற்ற பாலகனே எங்களை
வருந்தியழச் செய்தாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சைரத மேறியல்லோ நான்பெற்ற பாலகனே
பந்து விளையாடயிலே
பழிகாரப் பாவியுந்தன்
பந்தை மறிச்சானோ பாவிகுறுக்கிட்டானோ
பச்சைரதமீதிருந்தே நான்பெற்ற கண்மணியே
பதறிவிழுந்தாயே.

முத்துரதமேறியல்லோ நான்பெற்ற கண்மணியே
மோடிவிளையாடயிலே
மூர்க்கமுள்ள பாவியுந்தன்
மோடியெடுத்தானோ மோதியுனைக்கொண்ருனோ
முத்துரதமீதிருந்தே நான்பெற்ற பாலகனே
முறிந்து விழுந்தாயே.

கொத்தான வாழைமரம் நான்பெற்ற பாலகனே
குலையோ பழுத்திருக்கு
கோரப்புயல் வீச கொடிய கடல் கொந்தளிக்க
கொத்தான வாழைமரம் குலைதாங்கமாட்டாமல்
நான்பெற்ற கண்மணியே இன்றைக்கு
குலையோடு சாஞ்சுதடா.

முத்தான நெல்லிமரம் நான் பெற்ற கண்மணியே
முழுக்கக்கனிஞ்சிருக்கு
மூர்க்கப்புயலடிக்க முக்கடலும் தத்தளிக்க
முத்தான நெல்லிமரம் முடிதாங்கமாட்டாமல்
நான்பெற்ற பாலகனே இன்றைக்கு
முட்டோட சாஞ்சதடா.

நினைச்சா மனங்குமுறும் நான்பெற்ற பாலகனே
உன்னை நெஞ்சில்வச்சாப் புண்ணாகும்
கணிச்சா மனம் நோகும் நான் பெற்ற கண்மணியே
உன்னைக் காண்பதினியெக்காலம்.

## அண்ணனுக்குப் புலம்பல்

அண்ணாவே அண்ணாவே அன்புள்ள அண்ணாவே
கண்ணான அண்ணாவே உங்களைக் காண்பதினியெக்காலம்

கஸ்தூரிப்பாத்திக்கட்டி பொன்னான அண்ணாவே
நான்பிறந்த சீமையிலே
காவிரியின் நீர்ப்பாச்சி
கணக்காக் குழைமிதிச்சு கருங்குருவை நெல்விதைச்சு
கதிர்கள் குலைசாய என் அருமைப்பிறப்பே
ஆசாரயென்பிறப்பே உங்களோடா
கனத்தமுடி சாஞ்சதென்று நாங்க
கதறித்துடிக்கிறது கண்ணான அண்ணா
நீங்கபோகும் கைலாசம் கேட்கலையோ

சவ்வாதுப் பாத்திகட்டி கண்ணுன அண்ணுவே
சாரல்நதி நீர்ப்பாச்சி நான் பிறந்த பூமியிலே
சரியாக் குழைமிதிச்சு தனிச்சம்பா நாத்துநட்டு
சம்பாக் குலேசாய என் பொறுமைப்பிறப்பே
புத்தியுள்ள யென்பிறப்பே என் கூடப்பிறந்த
சமர்த்தன்முடி சாஞ்சதென்ணு நாங்க
தவித்துப்புலம்புறது பொன்ணுன அண்ணு
நீங்கபோகும் தனிநாட்டுக்கெட்டலேயோ.

காலே வெயிலடிக்கும் பொன்ணுண அண்ணுவே
காளேமணி ஓசையிடும் இன்றைக்கு
கமலே கட்டி நீர்ப்பாய்ச்ச
நீங்கபெற்றுப் பேருவைத்த
கண்மணிகள் தேடுதண்ணே.

மாலே வெயிலடிக்கும் கண்ணுண அண்ணுவே
மாட்டுமணி ஓசையிடும் இன்றைக்கு
வயல் உழுது நெல்விதைக்க
நீங்கபெற்றுப் பேருவைத்த
மக்கள்மனம் தேடுதண்ணே.

காசினியில் உள்ளவர்க்கே பொன்ணுன அண்ணுவே
கனத்தவரிசைவரும் கனசீருமுன்புவரும்
காஞ்சிபுரம் பட்டுவரும்
காளேவண்டி பூட்டிவரும் இன்றைக்கு
கனத்த வரிசையில்லே
கனசீரு முன்பில்லே
காஞ்சிபுரம் பட்டில்லே கண்ணுன யென்பிறப்பே
நாங்க கதறியழுகிறது நீங்கபோகும்
கைலாசம் கேட்கலேயோ.

சீமையிலே உள்ளவர்க்கு சீருள்ளயென்னண்ணு
சீருவரிசைவரும் சில சீருமுன்புவரும்
சேலத்துப்பட்டுவரும்
சின்னவண்டி கட்டிவரும் இன்றைக்கு
சீருவரிசையில்லே
சிலசீரு முன்பில்லே

சேலத்துப்பட்டில்லே பொன்ணுனயென்னண்ணு
நாங்க தேடியழுகிறது நீங்கபோகும்
சிவலோகம் கேட்கலேயோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பிக்குப் புலம்பல்

அன்புள்ளதம்பி அழகுள்ளயென் தம்பி
கண்ணுன தம்பி உன்னைக்காண்பதினியெக்காலம்

பவளரதமேறியல்லோ என் பொன்னுன தம்பிநீ
படைவேட்டையாடயிலே
பார்த்திருந்த பாவியெமன்
பற்றிப் பிடிச்சானே படைநடுங்க வைத்தானே
பவளரதமுறிஞ்சு கண்ணுன தம்பியுன்
பாரமுடிசாஞ்சதென்னே உந்தன்
பருவமருமக்களுக்கு அன்புள்ள தம்பி நீயும்
பதில்சொல்ல வாரதெப்போ.

வைரரதமேறியல்லோ என் கூடப்பிறந்த தம்பிநீ
வனவேட்டையாடயிலே
வாள்கொடிய பாவியெமன்
வாளையெடுத்தானே வனம்நடுங்கச் செய்தானே
வைரரதமுறிஞ்சு கண்ணுன தம்பி உன்
மகுடமுடி சாஞ்சதென்னே உந்தன்
வரிசை மருமக்களுக்கு பொன்னுன தம்பி நீ
வார்த்தைசொல்ல வாரதெப்போ.

நந்தவனப் பூந்தோட்டம் கண்ணுனயென் பிறப்பே
நடுவிருக்கும் தில்லைவனம்
தில்லைமலரெடுத்து தினுசுக்கொரு மாலைகட்டி
திருப்பூட்ட எண்ணருந்தேன்
திருமணக் கால் நாட்டலையே
திருப்பூட்டிப் பார்க்கலையே நான்பாவி கொண்டுவந்த
தில்லைமலர் ரோஜா செண்டும் மலரலையே.

சுகந்தமலர் பூந்தோட்டம் பொன்னுன பொன் பிறப்பே
தொலைவிருக்கும் முல்லைவனம்
முல்லை மலரெடுத்து முத்தாய் சரம்தொடுத்து
முகூர்த்தம் வைக்க எண்ணிருந்தேன்
முகூர்த்தக்கால் நாட்டலையே
முகூர்த்தம் வச்சுப்பார்க்கலையே நான்பாவி கொண்டுவந்த
முல்லைமலர் ரோஜா மொட்டும் மலரலையே.

நாகரீக உலக நடத்தையினை நன்கறிந்தே!
சோகமுடனழுகு சுந்தரியாள் ஒப்பாரி
சொல்லத் தமிழ் மணக்க
சொல்லுகிற வாய் மணக்க
தென்னந்தமிழ் இனிக்க செந்தமிழில் ஆர்வமுடன்
சிங்கத் தமிழ்மறவன்: கோவிந்தசாமி
செப்பினேன் இங்கிதமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org